பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 05 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

**1.** தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கு தவெக-விற்கு பெரும்பான்மை இல்லை என்று ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்துள்ளார்.

**2.** பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்துக்கு எதிரான உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**3.** தமிழகம், மேற்குவங்கம், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**4.** தமிழகத்தில் அடுத்த எட்டு நாட்களுக்கு பரவலாக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் புதிய அரசு அமைப்பதற்கு தவெக-விற்கு பெரும்பான்மை இல்லை என்று ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மக்கள் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தவெக தலைவர் திரு. விஜய்க்கு, ஆளுநர் அழைப்பு விடுத்ததாகவும், அந்த சந்திப்பின் போது புதிய அரசு அமைவதற்கான பெரும்பான்மை ஆதரவு தவெகவிற்கு இல்லை என்று விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தவெக தனிப்பெரும் கட்சி என்ற நிலையில், ஆதரவு கோராமல் காங்கிரஸ் கூட்டணி கடிதத்துடன் ஆதரவு கோரியதால் பதவியேற்க அழைப்பு விடுக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என்று மத்திய அரசின் கூடுதல் வழக்கறிஞர் திரு சுந்தரேசன், ஆளுநருக்கு சட்ட ஆலோசனை வழங்கியுள்ளார்.

புதிய அரசு அமைப்பது தொடர்பாக ஆளுநர் கேட்டுக்கொண்டதன்பேரில் இந்த சட்ட ஆலோசனை வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில், தவெக ஆட்சி அமைப்பதற்கான ஆதரவை திரட்டுவதற்கு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

தவெக-வுக்கு 112 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே உள்ள நிலையில் வி.சி.க. மற்றும் இடதுசாரி கட்சிகளிடம் ஆதரவு கோரி கடிதம் அனுபப்பப்பட்டு இருப்பதாக விசிக தலைவர் திரு. தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலினுடன் இன்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தின் போது இடதுசாரி கட்சி தலைவர்களும் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. திருமாவளவன், தவெகவிற்கு ஆதரவு அளிப்பது குறித்து கட்சி கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிலையில், அரசு அமைப்பது தொடர்பாக ஆளுநருக்கு எந்தவித அழுத்தமும் கொடுக்கப்படவில்லை என்று பிஜேபியின் மாநில செய்தி தொடர்பாளர் திரு. நாராயணன் திருப்பதி கூறியுள்ளார்.

மக்கள் தவெகவை தேர்ந்து எடுத்துள்ளதாகவும் அவர்கள் தங்களுக்கான ஆதரவை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆதரவு திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் புதிய அரசை அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்ற திமுக உறுப்பினர்களின் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது.

அக்கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

<<<<<<<>>>>>

பாகிஸ்தானின் எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை அமைந்ததாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஓராண்டுக்கு முன்னர் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில்,

இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் முதலாமாண்டு நிறைவுநாள் இன்று கொண்டாடப்பட்டதையொட்டி, திரு ஜெய்சங்கர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு திட்டமிட்ட செயல்பாடுகள் மூலம் தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், நாட்டின் அமைதியை குலைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத த்தை ஒருபோதும் இந்தியா அனுமதிக்காது என்ற உறுதிபாடு மீண்டும் ஒருமுறை இந்நாளில் நிரூபிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், ஓராண்டுக்கு முன்பு ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்திய படைகள் தங்கள் வீரத்தை வெளிப்படுத்தி, நம் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு கடுமையான பதிலடி கொடுத்ததாக கூறினார்.

<<<<<<<>>>>>

தமிழகம், மேற்குவங்கம், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய அமைச்சரவைச் செயலர், மாநில தலைமைச் செயலர்கள் மற்றும் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நடத்தை நெறிமுறைகள் முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் **Falta** சட்டப்பேரவைத் தொகுதிக்கு மறு வாக்குப்பதிவு நடத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதால், அந்த தொகுதியில் மட்டும் நடத்தை நெறிமுறைகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதிக்கான மறு வாக்குப்பதிவு இம்மாதம் **21**-ஆம் தேதி நடத்தப்பட்டு, **24**-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட உள்ளன.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த எட்டு நாட்களுக்கு பரவலாக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 63 Sec. )***

கோடை வெயிலின் தாக்கம் கடந்த சில நாட்களாக அதிகரித்து வரும் நிலையில், தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்று பெய்த மழையால் வெப்பம் ஓரளவு தணிந்துள்ளது.

மதுரை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக இடி மின்னலுடன் பெய்த மழையால், சாலைகளில் தண்ணீர் தேங்கியதாகவும், இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — ரகுராஜா - 41 Sec.)***

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழை காரணமாக, தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் நீர்வரத்து தொடங்கியது.

இதனையடுத்து, சுற்றுலாப்பயணிகள் அருவிகளில் குளித்து மகிழ்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செந்தில் — 35 Sec. )***

நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் பெய்த மழையால் உப்பு உற்பத்தி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***<u>(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 32 Sec. )</u>***

<<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீஆதிகேசவ பெருமாள் கோவில் தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

--------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உலக நன்மை வேண்டி சிறப்பு யாகம் நடைபெற்றது.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 3-6, 6-4, 7-6 என்ற செட் கணக்கில் மனீஷ் சுரேஷ்குமாரை வென்றார்.

-------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

--------------

தும்கூர் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி, Zheel Desai ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<<<END>>>>>**